# உள்ளதை தந்தேன் இறைவா

உள்ளதை தந்தேன் இறைவா
உண்மையை உரைத்தேன் தலைவா
உள்ளத்தை தந்தேன் தேவா
உயர் பலியாக்குவாய் நாதா – 2

**1**
ஆலயம் திறந்தது பலிசெய்ய நுழைந்தேன்
அதிலொரு பெருந் துடிப்பு
கலசம் ஒளிர்ந்தது கனிமொழி ஒலித்தது
அது ஒரு நல் விதைப்பு
தாபத்தை ஏற்றேன் தவறினைக் களைந்தேன்
அதிலொரு பலன் அளிப்பு
உள்ளத்தை அளித்தேன்  இடரையும் இணைத்தேன்
அது ஒரு உளப் பிணைப்பு

**2**
படைத்த உன் பொருளை  உனக்கே படைத்தேன்
அதிலொரு புது மகிழ்ச்சி
அளித்த மண்பொருளை  பலியாய் மாற்றுவாய்
அது ஒரு விண் நிகழ்ச்சி
மகனின் பலியாய் மானிடன் பொருளாம்
அதிலொரு தனிச் சிறப்பு
இறை விண் நிகழ்ச்சியில்  மானிடன் பங்காம்
அது ஒரு புதுப் பிறப்பு